# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின்
## நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

தேர்தல் அலுவலர்களுக்கான

**துணைக் கையேடு – 1**

(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

# வேட்பு மனுக்கள்

# 2023

திரு.தயானந்த் கட்டாரியா, இ ஆ ப.,
ஆணையர்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**உங்களுடன்**

அன்புடையீர்,

தன்னார்வ அமைப்புகளாகவும், (Voluntary Formation), தன்னாட்சி முறையில் (Autonomous Functioning) செயல்படுவதாகவும், மக்களாட்சி வழியிலான (Democratic Control) கட்டுப்பாடு மற்றும் தொழில் முறை மேலாண்மை (Professional Management) ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகவும் கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் (Members of the Board) மற்றும் தலைவர்/துணைத்தலைவர் (Office Bearers) ஆகியோரின் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதும், சிறப்பானதும், பொறுப்பானதும் ஆகும்.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் **23,000**–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் நிர்வாகக் குழுக்களுக்கு சுமார் **2** லட்சத்திற்கும் அதிகமான நிர்வாகக்குழு உறுப்பினர்களை (Vacancies) சுமார் **2** கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் (வாக்காளர்கள்) தேர்ந்தெடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான இத்தேர்தல்கள் ஒரு மாபெரும் நிகழ்வாகும்.

இச்சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் அமைதியாகவும், ஒழுங்காகவும், சட்ட விதிகளுக்குட்பட்டும் (Free, fair, Transparent, Peacefully, Orderly, as per Act Rules and Bylaws) நடத்த வேண்டிய சட்டபூர்வ பொறுப்பும் கடமையும் ஆணையத்திற்குள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்திடும் பொறுப்பிலுள்ள அனைத்து அலுவலர்களும் இதனை உணர்ந்து தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமையினையும், பொறுப்பினையும், சிறப்பாகச் செய்திடுவார்கள் என்று ஆணையம் எதிர்பார்க்கிறது.

இவ்வகையில் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள இதர கையேடுகள், துணைக்கையேடுகள் மற்றும் சுற்றறிக்கை தொகுப்புகளுடன் ஆணையத்தின் இக்கையேடும் மிக்க பயன்தருவதாக அமையும் என்றும் ஆணையம் உறுதியாகக் கருதுகிறது.

வாழ்த்துக்களுடன்,

நாள்: **03.02.2023**

(தயானந்த் கட்டாரியா)

# உள்ளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | வேட்பு மனுக்களைப் பெறுதல் | 2 |
| | (1 ) முதனிலை ஏற்பாடுகள் | 2 |
| | (2) இந்திய நிலையான நேரம் | 3 |
| | (3) தேவைப்படும் படிவங்கள் | 3 |
| | (4) வாக்காளர் பட்டியல் | 3 |
| | (5) இடங்கள் ஒதுக்கீடு | 4 |
| | (6) வேட்பு மனு படிவம் | 5 |
| | (7) வேட்பு மனு பெற்றமைக்கான ஒப்புகை | 6 |
| | (8) வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு வேண்டியவைகள் | 6 |
| | (9) நியமனங்கள் முன்மொழிய வேண்டியவர் யார் | 6 |
| | (10) ஒரு பதவிக்கு மேல் போட்டியிடுதல் கூடாது | 7 |
| | (11) வேட்பு மனுக்களை அளித்தல் | 7 |
| 3 | வேட்பு மனுக்கள் பரிசீலனை, பட்டியல், திரும்பப் பெறுதல் | 10 |
| | (1) வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல் | 10 |
| | (2) வேட்பாளர்களின் தகுதியும் தகுதியின்மையும் | 11 |
| | (3) வேட்பாளரின் இனம் தொடர்பான ஐயப்பாடு | 13 |
| | (4) பரிசீலனைக்குப் பிறகு ஆணையிடுதல் | 14 |
| | (5) மறுப்புகளை எதிர்த்துரைத்தல் | 14 |
| | (6) ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | 15 |
| | (7) வேட்பு மனுவைத் திரும்பப் பெறுதல் | 15 |
| 4 | போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் | 17 |
| | (1) வேட்பாளர் பட்டியலை வெளியிடுதல் | 17 |
| | (2) போட்டியில்லாத தேர்தல்களின் முடிவு அறிவித்தல் | 18 |
| 5 | ஒப்படைக்கப்படவேண்டிய ஆவணங்கள் | 21 |
| 6 | முடிவுரை | 22 |
| 7 | இணைப்புகள் ( 1 முதல் 8 வரை) | 25–53 |

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

## தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 1

**(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)**

## வேட்பு மனுக்கள்

## 1. முன்னுரை

**1.1.** கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களின் தேர்தல் பணிகளில் வேட்பு மனு தொடர்பான பணிகள் மிக முக்கியமானதொன்றாகும். இப்பணியில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்கள் இப்பணி தொடர்பாக **1983**-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் **1988**-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளில் (இனிவரும் இடங்களில் முறையே சட்டம் மற்றும் விதி என்று கூறப்படும்) கூறப்பட்டவற்றை நன்கு அறிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக தேர்தல் நடத்துவது தொடர்பான சட்டப்பிரிவு **33(11)** மற்றும் விதி எண்.**52**, 52-A மற்றும் **53** ஆகியவற்றையும் ஏற்கெனவே தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான கையேட்டினையும் நன்கு அறிந்து தனது பணியினை மிக்க கவனமுடனும் சிறப்பாகவும் ஆற்றிட தன்னை முழுஅளவில் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

**1.2** இக்கையேட்டில் சொல்லப்பட்டவை சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவற்றின் அடிப்படையில் அளிக்கப்பட்ட விளக்கங் – களாகும் . இதில் ஐயம் ஏதும் எழுமானால், சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவைகளையே கைக்கொள்ளவேண்டும்.

## 2 வேட்பு மனுக்களைப் பெறுதல்

### 2.1. முதனிலை ஏற்பாடுகள்

**2.1.1** தேர்தல் அறிவிப்பில் அறிவித்தபடி தேர்தல் அலுவலர் வேட்பு மனுக்களைப் பெற வேண்டி அறிவிக்கப்பட்ட இடத்தில் வேட்பு மனுக்களைப் பெறவும், பிற கடமைகளாற்றவும் இன்றியமையாத ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஒரு நாள் முன்னதாகவே தொடர்புடைய சங்கத்திற்கு வந்துவிடல் வேண்டும். இது தொடர்பாக, தேவைப்படும் அலுவலரை நியமித்து உதவிக்கு வைத்துக் கொள்ளலாம். மேலும் அவர் அங்கிருந்து, வேட்பு மனுக்கள் பெறப்படும் நாள் முதல் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுவதுவரை, தேர்தல் அலுவலரின் செயற்பாடுகள் அனைத்தையும் சரியாக நிறைவேற்றுவதில் உதவி செய்வதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அலுவலர் உள்ளூர்ச் சூழ்நிலைகளை ஆய்ந்து, நெருக்கடி இருக்குமேயாயின், பாதுகாப்புக்குப் போதிய காவலர் அளிக்கப்படுவதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**2.1.2** தேர்தல் அலுவலர் மேற்கண்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் எந்த உதவிக்காகவும் மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது பார்வையாளரைத் (Observer) தொடர்பு கொள்ள வேண்டும்.

## 2.2 இந்திய நிலையான நேரம் பின்பற்றப்பட வேண்டும்

**2.2.1** தேர்தல் அலுவலர், இந்திய நிலையான நேரத்தை (Indian Standard Time) கவனித்துத் தனது கைக்கடிகாரத்தை சரியாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். பல்வேறு சட்டம் சார்ந்த நோக்கங்களின் பொருட்டு தகராறுகள் எழுவதைத் தவிர்க்க வேண்டி இந்நேரத்தை மட்டுமே பின்பற்றுதல் வேண்டும்.

## 2.3 தேவைப்படும் படிவங்கள் :

**2.3.1** வேட்பு மனுக்கள் தொடர்பாக பின்வரும் படிவங்கள் போதிய எண்ணிக்கையில் தேர்தல் அலுவலருக்கு சங்கத்தால் வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

1. படிவம் 18 – வேட்பு மனு படிவங்கள்
2. படிவம் 19 – வேட்புமனு திரும்பப் பெறும் அறிவிப்பு
3. படிவம் 20 – போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியல்

**2.3.2** தேர்தல் அலுவலர் மேற்கூறிய அனைத்து இனங்களின் படிவங்களைப் போதிய எண்ணிக்கையில் தன்வசம் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அவை குறைவாக இருக்குமேயாயின் ஒளி அச்சு நகல் அல்லது கையெழுத்துப் படியின் படிவங்களை அவர் பயன்படுத்தலாம். போதுமான அளவில் எழுதுபொருள்களையும் அவர் வைத்திருத்தல் வேண்டும்.

## 2.4 வாக்காளர் பட்டியல்

**2.4.1** தேர்தல் அலுவலர், தம்மிடம் அளிக்கப்பெற்ற வாக்காளர் பட்டியல்கள் முறையாக உள்ளதா என்று சரிபார்த்தல் வேண்டும்.

வாக்காளர் பட்டியல் அலுவலரால் திருத்தம் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ள விபரத்தையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## 2.5 இடங்கள் ஒதுக்கீடு

**2.5.1** சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவியிடங்கள் பெண்கள், பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பொது என ஒதுக்கப்பட்டிருக்கும். எனவே, தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பில் கண்டுள்ளபடி ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்படாத பதவியிடங்கள் போன்ற விவரங்களை அறிந்துகொண்டு, அத்தகைய ஒதுக்கீட்டுக்கிணங்க வேட்பு மனு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். பெண்களுக்காக மற்றும் பட்டியல் இனம் அல்லது பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதோர் இடத்தில் அந்த வகுப்பை அல்லது இனத்தை அல்லது பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே நேர்வுக்கேற்ப, போட்டியிடல் வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட அத்தகைய பதவியிடங்களில் பிறர் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யப்படக்கூடாது. எவரேனும் அவ்வாறு வேட்புமனு தாக்கல் செய்திருப்பின், பரிசீலனை செய்யும் நேரத்தில் தள்ளுபடி செய்துவிடல் வேண்டும். ஆயின், பட்டியல் இனம் அல்லது பட்டியல் பழங்குடி இனத்தவர்கள், பெண்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்படாத பொது இடத்தினைப் போட்டியிடுவதற்குத் தேர்ந்தெடுப்பாராயின் அந்த இடத்தில் போட்டியிடலாம், ஆயின் ஒருவர் ஏதாவது ஒரு உறுப்பினர் இடத்திற்கு மட்டுமே போட்டியிட முடியும்.

## 2.6 வேட்பு மனு படிவம்

**2.6.1** உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்பாளர்களின் வேட்பு மனுவானது படிவம் **18–ல் (இணைப்பு -1)** வழங்கப்பட வேண்டும். அச்சிட்ட அப்படிவம் வேட்பு மனுக்களைப் பெறுவதற்காக அளிக்கப்பெற்ற நாளில் அறுதியிடப்பெற்ற நேரம் வரை வழங்கப்பட வேண்டும்.

[வேட்பு மனு படிவம் **18** தொடர்பாக ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.**321/2018**/கூதே**1** நாள் **19.07.2018** **(இணைப்பு 2)** பார்க்கவும் ]

**2.6.2** வேட்பு மனு படிவத்திற்கு கட்டணம் ஏதும் கிடையாது. இப்படிவத்தின் பத்தி **2ல்** (வாக்காளர் தொகுதியின் பெயர் (ஏதேனும் இருப்பின்)) என்றுள்ளது. இதற்கு எதிரே போட்டியிடும் வேட்பாளரால், பெண் / பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் / பொது ஆகியவற்றில் எந்த இடத்திற்கு போட்டியிடுகிறார் என்ற விவரத்தைத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இதனை தேர்தல் அலுவலரும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**2.6.3** வேட்பு மனுவினைப் பெறும் தேர்தல் அலுவலர், வேட்பு மனுவில் அதன் வரிசை எண்ணைக் குறிப்பதுடன், வேட்பு மனு அவரிடம் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தைப் பதிவு செய்தல் வேண்டும். போட்டியிடும் ஒதுக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்படாத பொது இடங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் இடத்திற்கு போட்டியிடும் வேட்பாளரின் உறுதிமொழிகள் உள்ளனவா போன்றவற்றையும் கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

## 2.7 வேட்பு மனுக்களைப் பெற்றமைக்கான ஒப்புகை

**2.7.1** வேட்பு மனு படிவத்தைக் கவனமாக ஆராய்தல் வேண்டும். பின்னர் அதற்கான ஒப்புகை (acknowledgement) வேட்பாளரிடம் அல்லது முன்மொழிபவரிடம் அளிக்க வேண்டும். இதற்கான படிவம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 3)

## 2.8 வேட்பு மனு படிவத்தைத் தாக்கல் செய்வதற்கு வேண்டியவைகள்

**2.8.1** வேட்பு மனுத்தாக்கலுக்கு வைப்புத் தொகை ஏதும் இல்லை. சங்க வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் சங்க நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவரைத் தவிர வேறு எவரும் வேட்பு மனு தாக்கல் செய்ய இயலாது.

## 2.9 நியமனங்களை முன்மொழிய வேண்டியவர்

**2.9.1** வேட்பு மனு, விதிகளில் குறிப்பிட்ட படிவம் எண்.18ல் இருத்தல் வேண்டும். அம்மனுவில் வேட்பாளர் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வேறு இரு உறுப்பினர்கள், முன்மொழிபவராக ஒருவரும், வழிமொழிபவராக ஒருவரும் அதில் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்.

**2.9.2** தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தவிர வாக்காளர் பட்டியலில் வேறு ஒரு உறுப்பினர் மட்டுமே இருந்தால், அந்த வேட்பு மனு வழிமொழியப்பட வேண்டிய அவசியமில்லை.

**2.9.3** தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தவிர, வாக்காளர் பட்டியலில் வேறு உறுப்பினர்கள் எவருமே இல்லையென்றால், அந்த வேட்பு மனுவை முன்மொழியவோ அல்லது வழிமொழியவோ அவசியமில்லை.

## 2.10 ஒரு பதவிக்கு மேல் போட்டியிடக் கூடாது

**2.10.1** கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் ஒரு வேட்பாளர் ஒரு உறுப்பினர் பதவிக்குத்தான் போட்டியிட இயலும். பெண்கள் / பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் / பொது ஆகிய இடங்களில் ஏதாவது ஒரு இடத்திற்கு மட்டுமே போட்டியிட இயலும். இட ஒதுக்கீட்டின்படியான இடங்களுக்கு போட்டியிட தகுதி உள்ள பெண்கள் / பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோர் அவ்வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது பொது இடமாகிய ஏதாவது ஒரு இடத்தை அவர்கள் தேர்வு செய்து வேட்பு மனுத் தாக்கல் செய்யலாம். சுருக்கத்தில் வேட்பாளர் ஒருவர் ஒரு நேரத்தில் ஒரு உறுப்பினர் இடத்திற்கு (one election) மட்டுமே போட்டியிட முடியும்.

**2.10.2** பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர் தாம் தாக்கல் செய்யும் வேட்பு மனுவில், தாம் சார்ந்துள்ள இனம் (caste) அல்லது பழங்குடியின் பெயரைக் குறிப்பிடுவதுடன், படிவம் 18-ல் அதற்கான அவரது உறுதிமொழி, அதற்கான இடத்தில் பெற வேண்டும்.

## 2.11 வேட்பு மனுக்களை அளித்தல்

**2.11.1** வேட்பு மனுக்கள், தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பெற்ற நாளன்று உரிய நேரத்திற்குள் வேட்பாளரால் அல்லது வேட்பாளரை முன்மொழிபவரால் தொடர்புடைய தேர்தல் அலுவலரிடம் நேரில் அளிக்கப் பெறுதல் வேண்டும். தேர்தல் அலுவலரால் வேட்பு மனுக்கள் பெறப்பட்டவுடன் அதன் வரிசை எண்ணையும் அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான நேரத்தையும் நாளையும் அதன் மீது குறித்து அவரால் சுருக்கொப்பமிடல் வேண்டும். குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு முன்னதாக அல்லது பின்னதாக அளிக்கப்படும் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

**2.11.2** **52**வது விதியின் உள்விதி **(8) (aa)**–ன் கீழ் உள்ள விதிகளுக்கிணங்க ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக நான்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம். ஒரு தேர்தலுக்கு அதாவது ஒரு உறுப்பினர் (one election) பதவிக்கு மட்டுமே ஒரு வேட்பாளர் போட்டி போடலாம் என்ற நிலையில் ஏற்றுக்கொள்ளும் வேட்பு மனுவினைத் தவிர்து இதர மிகுதியாக அளிக்கப்பட்ட வேட்பு மனுக்களை பரிசீலனை செய்கின்ற போது தள்ளுபடி செய்து விடுதல் வேண்டும். அதனை அறிவதற்காக அதன் மீது மிகையாக உள்ளது என்ற குறிப்பு ஒன்றினை வழிகாட்டலுக்காக எழுத வேண்டும்.

**2.11.3** வேட்பு மனுவினை பரிசீலனைக்குரிய நாளன்று குறிப்பிடப்பெற்ற கால அளவின்போது மட்டுமே தள்ளுபடி செய்தல் வேண்டும். அதற்கு முன்னதாக தள்ளுபடி செய்யக்கூடாது. ஆகவே, தேர்தல் அலுவலர் வேட்பு மனுக்களை உரியவாறு, அவற்றை அளிக்கும் நேரத்தில்கூட முறையாகச்

சரிபார்த்தல் வேண்டும். கணிசமான தன்மையில் இல்லாமல், ஆனால் சொல்வழக்குப் பிழை அல்லது உச்சரிப்புப் பிழை அல்லது அச்சுப்பிழை அல்லது எழுத்துப்பிழை போன்ற சிறிய தன்மையிலான தவறு அல்லது தவறுகள் தொடர்பான நேர்வுகளில் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நபர் அல்லது அந்த நபர்களின் அடையாளம் குறித்து தேர்தல் அலுவலர் மனநிறைவு கொள்வாராயின் வேட்பு மனுவில் உள்ள பதிவுகளை வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளுக்கிணங்க பதிவு செய்து திரும்பப் பெறலாம். அவ்வாறு செய்வது பரிசீலனை செய்யும் நேரத்தில் அத்தகு காரணத்திற்காக வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்வதை தவிர்க்கும். வேட்பு மனுவில் உரியவரின் கையொப்பத்தை தவறான இடங்களில் இடுதல் அல்லது அவர்களின் முதல் எழுத்தை விட்டுவிடல் அல்லது வாக்காளர் பட்டியலில் உள்ளது போலல்லாமல் வேறுபட்ட எழுத்துப் பயன்பாட்டினை பின்பற்றுதல் போன்ற பிற சிறிய தவறுகள் வேட்பு மனுவினைச் செல்லுபடியற்றதாக்கிவிடாது.

[இது தொடர்பான ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.321/2018/கூதே1 நாள் 19.07.2018 (இணைப்பு 4) பார்க்கவும் ]

**2.11.4** இருப்பினும், வேட்பாளரின் அல்லது முன்மொழிபவரின் அடையாளமானது நேர்வுக்கேற்ப, சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தேர்தல் அலுவலர் இவ்வாறான வேட்பு மனுவில் தவறான பதிவுகள் தொடர்பான நிகழ்வுகளில் விதிகளை நன்றாக படித்துணர்ந்து மிகச்சிறந்த தன்து தீர்ப்புரிமையைப் பயன்படுத்தி முடிவெடுத்தல் வேண்டும். வேட்பு மனுக்களைப் பெறுகின்ற போது வேட்பு மனு செல்லுபடி நிலை குறித்த தகராறுகளையும் தேவையற்ற கலந்துரையாடல்களையும் அல்லது உரிய சட்டஞ் சார்ந்த

விதிக்கூறுகளையும் பொருள் விளக்கம் செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

## 3. வேட்பு மனுக்கள் பரிசீலனை, பட்டியல், திரும்பப் பெறுதல்

### 3.1 வேட்பு மனுக்களை பரிசீலனை (Scrutiny) செய்தல்

3.1.1 உரிய நேரத்தில் பெறப்பட்ட வேட்பு மனுக்களை, வரையறுக்கப்பட்டவாறு பரிசீலனை செய்வது, தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப் பெற்ற நேரத்தில், நாளில் மற்றும் இடத்தில் தொடங்கப் பெறுதல் வேண்டும். தேர்தல் அலுவலர், தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களை பரிசீலனை செய்வதற்கு, ஏற்புடையவாறு, உரிய வாய்ப்பினை வேட்பாளர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

**3.1.2** வேட்பாளர்களின் அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு, வேட்பாளராக அவர்களைச் சேர்த்திருப்பது முறையானதுதான் (Valid) என்று அறிந்து கொள்ளும் வகையில், வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்களுக்கோ, நியாயமான (reasonable) அனைத்து உதவிகளையும் தேர்தல் அலுவலர் வழங்கிட வேண்டும்.

**3.1.3** வேட்பாளர் ஒருவருக்கு எதிராக மறுப்புத் தெரிவிக்க விழையும் மறுப்புரையாளர்கள், அக்குறிப்பிட்ட வேட்பாளரின் வேட்பு மனுக்கள் பரிசீலினை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் மட்டுமே, மறுப்பு தெரிவிக்கலாம். வேட்பு மனு பரிசீலனை

செய்வதற்கு முன்போ அல்லது தேர்தல் அலுவலர் அவ்வேட்பு மனுவில் தனது குறிப்புகளை பதிந்த பிறகோ மறுப்புரையாளர் மறுப்பு தெரிவிக்கக் கூடாது. தேர்தல் அலுவலர் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் வழிவகை செய்துள்ளவாறு தாமே சுயமாக தனது மறுப்புகளை எழுப்பலாம். மறுப்புரையாளரின் மறுப்புகள் வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இருக்கலாம். ஆயின், எழுப்பப்டும் மறுப்புகள் ஆவணச் சான்றுகளைத் தாங்கியிருக்க வேண்டும். தெரிவிக்கப்படும் மறுப்புகளுக்கு ஆதரவாக உள்ள ஆவணச் சான்றுகள் அவரிடம் உள்ளது எனக் கருதினால் அவற்றைத் தாக்கல் செய்யுமாறு மறுப்புரையாளரை தேர்தல் அலுவலர் கோரலாம். அவர் மறுப்புரைகள் ஆவணச் சான்றுகளின் அடிப்படையில் இல்லாதிருக்கையில், அவை தனது முடிவுக்கு இன்றியமையாதது என்று கருதுகையில் தேர்தல் அலுவலர் அம்மறுப்புரைகளை ஒதுக்கித் தள்ளிவிடலாம்.

## 3.2. வேட்பாளர்களின் தகுதியும் தகுதியின்மையும்

3.2.1 வேட்பு மனுக்களைத் தீர்வு செய்வதில் தேர்தல் அலுவலரின் முடிவுக்கெதிராக உடன் மேல்முறையீடு செய்வதற்கு வழிவகை இல்லை என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். அவர் அனைத்து வேட்பாளர்களிடத்தும் நேர்மையாகவும், ஒரு சார்பில்லாமலும், சமமாகவும், நீதியாகவும், சட்டத்தின்படியும், நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தேர்தல் அலுவலர் மனவுறுதியுடனும் அலுவல் தன்மையுடனும் இருக்கவேண்டும். அப்போதுதான் வேட்பு மனுக்களைக் கூர்ந்தாய்வு செய்வதில் அவரது கடமை மற்றும் பொறுப்பினை உரிய வகையிலும் சீரிய முறையிலும் நிறைவேற்ற இயலும்.

தேர்தல் அலுவலர், போட்டியிடுகின்ற பிற வேட்பாளர்களால் அல்லது அவரை முன்மொழிபவரால் அல்லது தாமாகவோ, எழுப்பப்பட்ட மறுப்புகள் மீது விதி **52 (8) (**d**)**ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு காரணத்திற்காக வேட்பு மனுவை தள்ளுபடி செய்யலாம்; ஆனால் பிற காரணங்களின் அடிப்படையில் தள்ளுபடிச் செய்யக் கூடாது. தேர்தல் அலுவலர் தாமாகவோ, மறுப்பு எழுப்பும்போது தனது முடிவினைத் தெரிவிப்பதற்கு முன்னதாக அதற்கான காரணங்களையும் எழுப்பப்பட்ட மறுப்புகளின் தன்மையினையும் குறிப்பிட்டு வேட்பாளராலோ, அவர் பொருட்டு வந்திருக்கும் நபரில் எவரேனும் ஒருவராலோ மற்றும் அங்கிருக்கும் பிற வேட்பாளர்கள் மற்றும் அவர்களது சார்பாளர்களாலோ அவரிடம் அளிக்கப்படும் முறையீடுகளைக் கேட்டறிதல் வேண்டும். வேட்பு மனுக்கள் செல்லத்தக்க நிலை தொடர்பாக உண்மை நிலை மற்றும் சட்டம் குறித்த வினாக்கள் எழலாம். அவற்றை தேர்தல் அலுவலர் வேட்பாளரின் தகுதிகள் மற்றும் தகுதியின்மை தொடர்புடைய கூட்டுறவுச் சட்டம், குறிப்பாக சட்டம் பிரிவு **34**, மற்றும் விதிக் கூறுகளுக்கிணங்க முடிவு செய்தல் வேண்டும்.

**3.2.2** பெண்கள், பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் தொடர்பாக, தேர்தல் அறிவிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதவியிடங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும்.

**3.2.3** பெண்கள் மற்றும் பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் போன்றவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில், நேர்வுக்கேற்ப அந்த இனத்தை அல்லது வகுப்பை அல்லது பாலினத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே போட்டியிடுதல்

வேண்டும். மற்றவர்கள் போட்டியிடக்கூடாது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்காகப் பிறரிடமிருந்து ஏதேனும் வேட்பு மனு பெறப்படிருப்பின் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும். பெண்கள் மற்றும் பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினர் ஆகியோர் ஒதுக்கீடு செய்யப்படாத இடத்திற்காகப் போட்டியிடலாம். ஒதுக்கீடு செய்யப்படாத இடத்திற்காக அவர்களால் தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆயின் ஒரு வேட்பாளர் ஒரு உறுப்பினர் பதவிக்கு மட்டுமே போட்டியிடலாம் என்ற நிலையில் வேட்பாளர் தான் போட்டியிட விரும்பும் ஒதுக்கப்பட்ட / ஒதுக்கப்படாத இடம் பற்றி வேட்பு மனுவில் குறிப்பிட வேண்டும்.

[இடங்கள் ஒதுக்கீடு தொடர்பாக ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.944/2013/கூதே1 நாள் 05.04.2013 (இணைப்பு 5) பார்க்கவும் ]

## 3.3. வேட்பாளருடைய இனம் (Caste) தொடர்பான ஐயப்பாட்டுக்குரிய நிலை

3.3.1 பரிசீலினை செய்யும்போது, பட்டியல் இனம் அல்லது பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களுக்கு போட்டியிடுகின்ற வேட்பாளரால் கோரப்படும் இனம் பற்றிய சரியான தகவல் தொடர்பாக ஐயப்பாட்டுக்குரிய நிலை ஏதும் எழுமேயாயின், தேர்தல் அலுவலர், தொடர்புடைய வேட்பாளரை அவருடைய வேட்பு மனுவில் அவரால் உறுதிமொழி அளித்தவாறு அவர் பட்டியல் இனம் அல்லது பட்டியல் பழங்குடி, இனத்தவர்தானா என்பதைக்கேட்க வேண்டும். இயலுமாயின் தேர்தல் அலுவலர், வேட்பாளரின் கோரிக்கைக்கு ஆதரவாக ஆவணச் சான்றுகளைக் காண்பிக்குமாறு கேட்க வேண்டும்.

**3.3.2** மேலும், தேர்தல் அலுவலரின் கோரிக்கையை தவறென்று எதிர்ப்பதற்கான ஆவணச் சான்றுகளை அளிக்குமாறு மறுப்புரையாளர்களைக் கேட்டுக் கொள்ளல் வேண்டும். தேர்தல் அலுவலர், பின்னர், அவரின் வினாவுக்கான வேட்பாளரின் மறுமொழி மற்றும் இரு குழுவினராலும் காண்பிக்கப்பட்ட ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு செய்திடல் வேண்டும். தேர்தல் அலுவலரின் வினாவுக்கு வேட்பாளர் மறுமொழி அளித்தவுடன் மிகவும் வலுவுடைய ஆதாரங்களை மறுப்பாளர்கள் காண்பித்தாலொழிய அவரின் வேட்பு மனுவை அவர் தள்ளுபடி செய்திடலாகாது என்பதை அவர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## 3.4. பரிசீலனைக்குப் பிறகு ஆணைகள் இடுதல்

3.4.1 வேட்புமனு ஒன்று ஏற்றுக்கொள்ளப்படுமேயாயின் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் அல்லது தள்ளுபடி செய்யப்படுமேயாயின் அதற்கான காரணங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் வேட்பு மனுவில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து தேர்தல் அலுவலரின் ஆணையின் படியை வேட்பாளருக்கு அளிக்க வேண்டியதில்லை.

## 3.5. மறுப்புகளை எதிர்த்துரைத்தல்

3.5.1 வேட்பாளர்களின் அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு வேட்பாளராக அவர்களைச் சேர்த்திருப்பது முறையானதுதான் (valid) என்று அறிந்துகொள்ளும் வகையில் வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்களுக்கோ நியாயமான அனைத்து உதவிகளையும் தேர்தல் அலுவலர் வழங்கிடவேண்டும். மறுப்புகளை எதிர்த்துரைத்து மறுமொழியைத் தாக்கல் செய்யவேண்டி நேரம் வேண்டுகையில் நியாயமான நேரம் அனுமதிக்கப்படவேண்டும். ஆயின் அனுமதிக்கப்படும் நேரமானது வேட்புமனு பரிசீலனை (Scrutiny)க்கு அறிவிக்கப்பட்ட கால அளவிற்கு மேற்படக்கூடாது.

## 3.6. ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுதல்

3.6.1 பின்னர் தேர்தல் அலுவலர், வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றினை தயாரித்து (இணைப்பு-6) தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் சங்க அலுவலக அறிவிப்பு பலகையிலோ அல்லது அவரால் குறிப்பிடப்படும் (Specify) வேறு ஒரு இடத்திலோ வெளியிடவேண்டும்.

## 3.7. வேட்பு மனுவை திரும்பப்பெறுதல் (withdrawal)

3.7.1 வேட்பு மனுவை திரும்பப் பெறுதல் தொடர்பாக 52ஆவது விதியின் உள்விதி (8)(h)ஐக் கவனமுடன் படிக்க வேண்டும்.

3.7.2 திரும்பப்பெறும் அறிவிப்பானது படிவம் 19ல் (இணைப்பு -7) உரிய வேட்பாளரால் தேர்தல் அறிவிப்பில் வேட்பு மனுவை திரும்பப் பெறுவதற்கென அறுதியிடப்பட்ட நாள் மற்றும் நேரத்திற்கு முன்னதாக தேர்தல் அலுவலரிடம் வழங்குதல் வேண்டும். வேட்பு மனுக்களைத் திரும்பப்பெற்றுக் கொள்வதற்கான அறிவிப்பினை எந்நாள், எந்நேரம் வரை பெறப்படும் என்பதை தேர்தல் அறிவிப்பில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்

.

3.7.3 திரும்பப்பெறும் அறிவிப்பானது வேட்பாளரால் நேரிடையாகவோ அல்லது அத்தகைய வேட்பாளரால் திரும்பப் பெறும் அறிவிப்பை அளிப்பதற்கு எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட முன்மொழிந்தவராலோ அல்லது வழிமொழிபவராலோ அலுவலரிடம் அளிக்கப்படுதல் வேண்டும்.

3.7.4 இவ்விதிகளின் 52ஆவது விதியின் உள்விதி (8)ல் கூறு (h)-ன்படி தனது வேட்பு மனுவைத் திரும்பப் பெறுவதற்குக் கொடுக்கப்பட்ட திரும்பப்பெறல் அறிவிப்பை நீக்கிக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. ஒரு முறை திரும்பப் பெறுவதற்கான அறிவிப்புக் கொடுக்கப்பட்டுவிட்டால் அதுவே இறுதியானதாகும் (Final).

3.7.5 திரும்பப்பெறல் அறிவிப்பு கிடைத்ததும், தேர்தல் அலுவலர், தம்மிடம் அதனை அளித்த நாளையும் நேரத்தையும் அதன் மீது குறிப்பிட்டு அதனை அளித்தவரின் பெயரையும் பதிவு செய்தல் வேண்டும். இந்த ஆவணம் வேட்புமனுவை திரும்பப் பெறும் பதிவுருவாக தேர்தல் அலுவலரிடம் இருக்கும். மேலே பத்தி **3.7.3**ல் குறிப்பிடப்பெற்ற வேட்பாளரின் எழுத்து மூலமான அனுமதிக் கடிதமும் திரும்பப் பெறுவதற்கான அறிவிப்புடன் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

## 4. போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியலைத் தயாரித்தலும், வெளியிடுதலும்

### 4.1.போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுதல்

**4.1.1** 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் விதி **52(8)**(i)ல் சொல்லப்பட்டபடி இறுதியாக சரியானதென ஒப்புக்கொள்ளப்பட்டு, ஆனால் திரும்பப் பெறப்படாத வேட்பு மனுக்களில் கண்ட வேட்பாளர்களின் பட்டியலை படிவம் **20**ல் **(**இணைப்பு – **8)** தேர்தல் அலுவலர் தயாரித்து வெளியிடுதல் வேண்டும்.

**4.1.2** அப்பட்டியலில் போட்டி இல்லாதவர்கள் உள்ளிட்ட செல்லத் தக்க வேட்பாளர்கள் அனைவரின் பெயர்களும் உள்ளடங்கியிருக்க வேண்டும். வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்காக அறுதியிடப் பெற்ற நேரத்திற்குள் திரும்பப் பெறப்பட்டவர்கள் நீங்கலாக இவ்விதிகளின் கீழ் தள்ளுபடி செய்யப்படாத வேட்புமனுக்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். படிவம் **20**ல் உள்ள அப்பட்டியல், தேர்தல் அறிவிப்பில்

குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சங்க அலுவலக அறிவிப்புப் பலகையிலோ அல்லது அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட வேறு ஒரு இடத்திலோ வெளியிடப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைவிட போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின் அவர்களது பெயர்களின் ஆங்கில மொழி அகரவரிசைப்படி அவர்களுக்கு வரிசை எண் ஒதுக்கீடு செய்து அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நாளில் வாக்கெடுப்பு நடத்த தேர்தல் அலுவலர் ஏற்பாடு செய்யவேண்டும்.

**4.1.3** வாக்கெடுப்பு நடத்தவேண்டியதிருப்பின், இருக்கும் குறுகியகால அவகாசத்தைக் கருத்திற்கொண்டு வாக்குப் பதிவிற்குத் தேவையான வாக்குப்பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் எவ்வித விடுதலின்றி (omission), குறைவுகளின்றி (shortage) மாவட்ட தேர்தல் அலுவலரிடம் அறிவுரை பெற்று வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய நாளிலேயே சங்கத்தில் / வாக்குச் சாவடியில் இருந்திட தேர்தல் அலுவலர் தக்க ஏற்பாடுகள் செய்திடவேண்டும்.

[வாக்குப்பதிவு தொடர்பான துணைக்கையேடு – **3** – ஐப் பார்க்கவும்]

## 4.2. போட்டியில்லாத தேர்தல்களில் முடிவினை அறிவிப்புச் செய்தல்

**4.2.1** ஓர் தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எண்ணிக்கைக்கு அதிகமாக, சரியானதென்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆயின் திரும்பப்பெறப்படாத, வேட்பு மனுக்கள்

இல்லாத நிலையில் அந்த வேட்பாளர்கள் அனைவரும் அத்தொகுதிக்குத் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக தேர்தல் அலுவலர் அறிவிக்கவேண்டும். உடன் அவர்களது பெயர்ப்பட்டியல் சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகை அல்லது மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்படும் இடத்தில் முறையாக வெளியிடப்படுவதுடன், இது விபரத்தை தேர்தல் அலுவலர் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையத்திற்கும் அறிக்கை செய்திடவேண்டும்.

**4.2.2** எந்த ஒரு தொகுதிக்கும் போட்டியிடும் வேட்பாளர் எவரும் இல்லையென்றால், தேர்தல் அலுவலர், உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை செய்யவேண்டும்.

**4.2.3** ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு, தகுதியுள்ள, வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஒதுக்கீடு இடங்களை விட குறைவாக இருந்தால் அவர்களை முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக தேர்தல் அலுவலர் அறிவிப்புச் செய்வதுடன் அவர்களது பெயர்களையும் முறையாக வெளியிடவேண்டும். அதனை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு அறிக்கை (report) அனுப்பவேண்டும்.

**4.2.4** ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு, தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ள போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஒதுக்கீடு இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்து, அதே நேரத்தில், அத்தேர்தலில் போட்டியிடும்

அனைத்து வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டிய மொத்த இடங்களின் எண்ணிக்கைக்கு குறைவாகவோ அல்லது சமமாகவோ இருந்தால், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுக்கு ஓர் அறிவிப்புச் செய்தபின் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தகுதியாக உள்ள வேட்பாளர்களில் குலுக்கல் முறையில் (by lots), எவரெவர் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு தேர்ந்தெடுக்கப் – பட்டுள்ளனர், எவரெவர் ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், என்பதைத் தீர்மானிக்க (decide) வேண்டும். அதன் பின்னர் படிவம் 20–ல் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை, சங்க அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதன் பின்னர் இப்போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிக்க (Declare) வேண்டும். அதனை உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை (report) அனுப்பவேண்டும்.

**4.2.5** தேர்தலில் நிரப்பப்படவேண்டிய ஒதுக்கப்பட்ட இடங்கள் மேற்கூறப்பட்டபடி, நிரப்பப்பட்டிருப்பின், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களை தவிர்த்து, எஞ்சியிருக்கும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டிய, ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களைக் (Non reserved) காட்டிலும் அதிகம் இல்லாதிருந்தால் (not larger), படிவம்-20ல், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை சங்க அலுவலகத்திலுள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டி, அதன் பின்னர் அவர்களை ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களுக்கு (non reserved seat)

முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க (declare) வேண்டும். அதனை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

**4.2.6** மேற்காணும் இனங்களில் குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர், நிரப்பப்படவேண்டிய இடங்கள் இருக்குமென்றால், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு தேர்தல் அலுவலர் அறிக்கை அனுப்ப வேண்டும்.

**4.2.7** நிரப்பப்பட வேண்டிய இடங்கள் வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒதுக்கீடுகள் பற்றிய முழு விபரங்கள் விதி எண்.52(9)(a) முதல் (g) வரை கூறப்பட்டுள்ளன.

## 5. ஒப்படைக்கப் பட வேண்டிய ஆவணங்கள்

### 5.1. தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

**5.1.1** போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்ட பின்னர், தேர்தல் அலுவலர் பின்வரும் இனங்களின் ஆவணங்களை முறையாகப் பட்டியலிட்டு தகுந்த ஒரு உறையில் வைத்து முத்திரையிட்டு தனது பொறுப்பில் பாதுகாப்பாக வைத்திருந்து, தேர்தல் முடிந்தவுடன் மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் ஒப்படைக்கவேண்டிய ஆவணங்களுடன் இதனையும் தவறாது ஒப்படைக்க வேண்டும்.

1) பெறப்பட்ட அனைத்து வேட்பு மனுக்கள் மற்றும் அவற்றுடன் பரிசீலனையின் போது அல்லது எதிர்ப்புரையின்போது தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணச் சான்றுகள்;
2) படிவங்கள் 18,19,20 மற்றும் பயன்படுத்தப்பட்ட இரத படிவங்களின் அலுவலகப் படிகள்;
3) அதிகாரமளிப்புக் கடிதங்களுடன் படிவம் 19—ல் பெறப்பட்ட வேட்பாளர்களின் திரும்பப்பெறுகை அறிவிப்புகள்;
4) ஆங்கில மொழி அகர வரிசையில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வரிசை எண் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணம்;
5) ஏனைய பிற ஆவணங்கள்.

## 6. முடிவுரை:

6.1 ஏற்கனவே கூறியபடி வேட்பு மனுத்தாக்கல், பரிசீலனை, போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் போன்ற பணிகள் மிக முக்கியமான பணிகளாகும்.

**6.2** போட்டியிடும் வேட்பாளர்களுடன் அல்லது அவர்களது அதிகாரம் பெற்றவர்களுடன் நேரடியாகத் தொடர்பு (Communicate) கொள்ளவேண்டிய இப்பணியில், இப்பணி தொடர்பான சட்டம் மற்றும் விதிகளை நன்கு அறிந்து கொள்வதுடன், தேவையான நேர்வுகளில் வேட்பாளர்களுக்கோ, அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்களுக்கோ அச்சட்டவிதிகளை சுருக்கமாகவும், தெளிவாகவும், பொறுமையாகவும், அதிகப்படியான பேச்சுக்களுக்கும், விவாதங்களுக்குமிடமின்றி எடுத்துரைத்தலும், விருப்பு வெறுப்புக்கு இடமின்றி செயல்படுதலும் மிகவும் அவசியமாகும்.

வேட்பு மனு தொடர்பான பணி மிக அமைதியாகவும், எளிதாகவும், சிறப்பாகவும் அமைந்திட இது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

**6.3** சில தேர்தல் அலுவலர்களின் வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி புகார்கள் ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன. மாண்பமை உயர்நீதிமன்றங்களிலும் நீதிப்பேராணை மனுக்களாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தேர்தல் அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு தெரிவிக்கப்பட்ட புகார்களில் முக்கியமானவை.

**கீழ்வருமாறு:**

i. வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில், இடத்தில், நேரத்தில் இல்லை.

ii. வேட்புமனு படிவம் (Form No.18) தர மறுப்பு.

iii. குறிப் ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்பட்டது.

iv. தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்-18 ஏற்க மறுப்பு.

v. வேட்புமனு பெற மறுப்பு.

vi. குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.

vii. வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.

viii. **வேட்பு மனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.**

ix. **காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.**

x. **வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக** (Contrary to facts and circumstances) **சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.**

**6.4** எனவே இவ்வகையில் எவ்வித புகார்களுக்கும் இடம் தராது தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், சட்டவிதிப்படியும் நடைபெறுதல் தேர்தல் அலுவலர் கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும்**.**

# இணைப்பு – 1
## (பத்தி – 2.6.1.)

## படிவம் எண்.18
## (தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில்,
## விதி 52 (8) (எ) – யைப் பார்க்க)

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்

பிரிவு 33 (11)-ன்படி

**கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினராகத்**

**தேர்ந்தெடுப்பதற்கான வேட்பு மனு**

1) வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகின்ற சங்கத்தின் பெயர் -

2) அ) வாக்காளர் தொகுதியின் பெயர்(துணைவிதி படி ஏதேனும் இருந்தால் மற்றபடி இந்த விபரம் தரப்படவேண்டியதில்லை)

ஆ) வேட்பாளர் போட்டியிட விரும்பும் பிரிவு (விரும்பும் ஒரு பிரிவில் "ஆம்" என்று குறிப்பிடவும் டிக் அடிக்க வேண்டாம்)

| | |
|---|---|
| 1. மகளிர் | ☐ |
| 2. ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | ☐ |
| 3. பொது | ☐ |

3) 1) வேட்பாளரின் பெயர்

2) பாலினம் (Sex)

3) உறுப்பினர் எண்

4) அவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினரைச் சார்ந்தவரா?

5) அவ்வாறாயின் அவர் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியின் பெயர் (Particular Caste / Tribe)

6) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக உள்ளவராயின் அச்சங்கத்தின் பெயர்

4) தகப்பனார் / கணவர் பெயர்

5) வேட்பாளரின் முழு முகவரி

6) 1) முன்மொழிபவரின் பெயர்

2) உறுப்பினரின் பெயர்

3) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக இருந்தால் எந்தச் சங்கத்தின் பிரதிநிதியாக - வுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர்

7) முன்மொழிபவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப் பதிவு

8) 1) வழிமொழிபவரின் பெயர் :

2) உறுப்பினர் எண் :

3) கூட்டுறவுச் சங்கப் :

பிரதிநிதியாக இருந்தால் எந்தச்

சங்கத்தின் பிரதிநிதியாக

வுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர்

9) வழிமொழிபவரின் கையொப்பம் :

அல்லது பெருவிரல்

ரேகைப்பதிவு

## வேட்பாளரின் உறுதிமொழி

நான் தேர்தலில் நிற்க விரும்புகிறேன் என்றும், கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மை எதுவும் எனக்கு இல்லை என்றும் உறுதியாகக் கூறுகின்றேன்.

நான் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியானது மாநிலத்தில் எனது சொந்த ஊர் (Native Place) சம்பந்தப்பட்ட மட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் உறுதி கூறுகின்றேன்.

**வேட்பாளரின் கையொப்பம்**

## தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு

இந்த வேட்பு மனு …………………………….. (இடம்)……………………….. (நாள்) ……………………….. (நேரம்) ……………………….. என்பவரால் (வேட்பு மனுவைத் தேர்தல் அலுவலரிடம் கொடுக்கின்றவர் பெயர்) என்னிடம் நேரில் தாக்கல் செய்யப்பட்டது.

**தேர்தல் அலுவலரின் கையொப்பம்**

# இணைப்பு – 2
# (பத்தி – 2.6.1.)

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

## வேட்பு மனு தாக்கல் பணி தொடர்பான அறிவுரைகள்

வேட்பு மனு பெறுதல், பரிசீலித்தல், திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் போன்ற வேட்பு மனு தொடர்பாக தேர்தல் அலுவலர் கடைப்பிடிக்க வேண்டிய சட்டப்படியான வழிமுறைகள் பற்றி ஏற்கனவே தெளிவாக கையேடுகள் மற்றும் தேர்தல் அலுவலருக்கான பயிற்சியின் போது தெரிவிக்கப்பட்டிருந்தும் தேர்தல் அலுவலர்கள் வேட்புமனு பெறுதல் தொடர்பான சட்டப்படியான பணிகளைச் சரிவரிச் செய்வதில்லை என்று பல தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்றன. நீதிமன்றங்களில் உறுத்து கட்டளை மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. இதனை மாண்பமை நீதிமன்றம் கடுமையாக நோக்குகின்றது.

அவ்வகையில் வேட்பு மனு பெறுதல் தொடர்பாக ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ள மிகக் கடுமையான புகார்களில் சில

**1. தேர்தல் அலுவலர்கள் குறிப்பிட்ட நேரங்களில், இடங்களில் இருப்பதில்லை; மதிய உணவிற்கு செல்பவர்கள் திரும்ப வருவதில்லை.**

எவர் ஒருவரும் வேட்பு மனு தாக்கல் செய்யாவிடினும் 10 AM to 5 PM கண்டிப்பாக வேட்பு மனுதாக்கல் செய்யும் இடத்தில் இருத்தல் வேண்டும்.

மதிய உணவிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கென வெளியே செல்லுதல் கூடாது.

பணி இடத்திற்கு வந்த உடனும் பணி முடிவடைந்தவுடனும் மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் அலைபேசி மூலம் தகவல் தெரிவித்தல் வேண்டும்.

**2. அனைவரிடமும் வேட்பு மனு பெறுவதில்லை**

தகுதியுள்ள ஒருவரால் படிவம் 18-ல் தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுக்கள் பெற மறுத்தல் கூடாது.

3. **வேட்புமனு பெற்றதற்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுவதில்லை.**

வேட்பு மனு பெற்றவுடன் அதன் வரிசை எண்ணையும், அதனைப் பெற்றுக் கொண்டதற்கான நேரத்தையும் நாளையும் அதன் மீது குறித்து தேர்தல் அலுவலர் சுருக்கொப்பமிட வேண்டும். அதனைப் பெற்றதற்கான ஒப்புகையினை

கண்டிப்பாக அளித்தல் வேண்டும். வேட்பாளர் ஒப்புகை கேட்கவில்லை என்று காரணம் காட்டி ஒப்புகை சீட்டு வழங்காமல் இருத்தல் கூடாது.

## 4. தொகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடு செய்தல்

படிவம் 18-ல் வரிசை எண் 2-ல் "வாக்காளர் தொகுதியின் பெயர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது விவரம் சரியாக தெரியாத நிலையில் இதனை நிரப்புவதில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைப் போக்கிட படிவம் 18-ல் வரிசை எண் 2-ன் கீழ் புதிதாக கீழ்வரும் விவரத்தை சேர்த்து அதன்படி நிரப்பிட வேட்பாளர்களை வேட்புமனு தாக்கல் செய்யும் போது தேர்தல் அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும்.

**வரிசை எண் 2**

வேட்பாளர் போட்டியிட விரும்பும் பிரிவு:

(விரும்பும் ஒரு பிரிவில் "ஆம்" என்று

| | |
|---|---|
| குறிப்பிடவும் : | 1. மகளிர் |
| 'டிக்' அடிக்கத் தேவையில்லை | 2. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் |
| | 3. பொது |

## 5. படிவம் நிரப்புதல்

மையினால் நிரப்பிய படிவங்களில் சந்தேகத்திற்கிடமான சில திருத்தங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மெம்பர் எண்களில் திருத்தம் செய்வது, போட்டியிட விரும்பும் பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட டிக் அடித்தல் என்று சந்தேகத்திற் கிடமான நிகழ்வுகள் நடப்பதாக தெரிகிறது. இதனைத் தவிர்க்க தட்டச்சு / கணினி வழி படிவத்தை நிரப்பிடவும் அறிவுறுத்தலாம்.

## 6. வேட்பு மனு சிறு சிறு பிழைகளுக்காக நிராகரிக்கப்படுகிறது

சொல்வழக்குப் பிழை, உச்சரிப்புப் பிழை, அச்சுப் பிழை, எழுத்து பிழை, உரியவரின் கையொப்பம் தவறான இடங்களில் இடுதல், முதல் எழுத்தை (initials) வாக்காளர் பட்டியலில் உள்ளது போல் அல்லாமல் வேறுபட்ட எழுத்துப் பயன்பாட்டினை பின்பற்றுதல் போன்ற சிறிய தவறுகள் வேட்பு மனுவினை நிராகரிக்கக்கூடிய காரணங்களாக கொள்ளுதல் கூடாது.

பயிற்சி கூட்டங்களின் போதும், கையேடுகள் வழியும் அறிவுரைகள் வழங்கியும் சட்ட விதிகளைப் பின்பற்றாமலும், தன்னிச்சையாகவும் ஒருதலைப் பட்சமாகவும் தேர்தல் அலுவலர்கள் செயல்படுகிறார்கள் என்ற புகார்களுக்கு இடம்

தராமல் சட்ட விதிகளின்படி செயல்பட கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறான புகார்களுக்கு இடமளிக்கும் தேர்தல் அலுவலர்கள் பணி இடைநீக்கம் உட்பட்ட கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**மு.ராஜேந்திரன், இ ஆ ப**

**தேர்தல் ஆணையர்**

# இணைப்பு – 2ன் தொடர்ச்சி
## பகுதி 2.6.1

### மாதிரி படிவம்

**(தமிழ்நாடு 1988-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில், விதி 52 (8) (எ) – யைப் பார்க்க)**

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்

பிரிவு 33 (11)-ன்படி

கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினராகத்

தேர்ந்தெடுப்பதற்கான வேட்பு மனு

| | | | |
|---|---|---|---|
| 1) | வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகின்ற சங்கத்தின் பெயர் | : | |
| 2) | அ) வாக்காளர் தொகுதியின் பெயர்(துணைவிதி படி ஏதேனும் இருந்தால் மற்றபடி இந்த விபரம் தரப்படவேண்டியதில்லை) | : | 2. |
| | ஆ) வேட்பாளர் போட்டியிட விரும்பும் பிரிவு (விரும்பும் ஒரு பிரிவில் "ஆம்" என்று குறிப்பிடவும் டிக் அடிக்க வேண்டாம்) | : | 1. மகளிர் ☐<br>2. ஆதிதிராவிடர் /பழங்குடியினர் ☐<br>3. பொது ☐ |
| 3) | 1) வேட்பாளரின் பெயர் | : | |
| | 2) பாலினம் (Sex) | : | |
| | 3) உறுப்பினர் எண் | : | |
| | 4) அவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினரைச் சார்ந்தவரா? | : | |

| | | |
|---|---|---|
| | 5) அவ்வாறாயின் அவர் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியின் பெயர் (Particular Caste / Tribe) | : |
| | 6) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக உள்ளவராயின் அச்சங்கத்தின் பெயர் | : |
| 4) | தகப்பனார் / கணவர் பெயர் | : |
| 5) | வேட்பாளரின் முழு முகவரி | : |
| 6) | 1) முன்மொழிபவரின் பெயர் | : |
| | 2) உறுப்பினரின் பெயர் | : |
| | 3) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக இருந்தால் எந்தச் சங்கத்தின் பிரதிநிதியாகவுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர் | : |
| 7) | முன்மொழிபவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப் பதிவு | : |
| 8) | 1) வழிமொழிபவரின் பெயர் | : |
| | 2) உறுப்பினர் எண் | : |
| | 3) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக இருந்தால் எந்தச் சங்கத்தின் பிரதிநிதியாகவுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர் | : |
| 9) | வழிமொழிபவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப்பதிவு | : |

## வேட்பாளரின் உறுதிமொழி

நான் தேர்தலில் நிற்க விரும்புகிறேன் என்றும், கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மை எதுவும் எனக்கு இல்லை என்றும் உறுதியாகக் கூறுகின்றேன்.

நான் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியானது மாநிலத்தில் எனது சொந்த ஊர் (Native Place) சம்பந்தப்பட்டமட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் உறுதி கூறுகின்றேன்.

வேட்பாளரின் கையொப்பம்

## தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு

இந்த வேட்பு மனு ……………………………….. (இடம்)………………………….. (நாள்) ………………………….. (நேரம்) ………………………….. என்பவரால் (வேட்பு மனுவைத் தேர்தல் அலுவலரிடம் கொடுக்கின்றவர் பெயர்) என்னிடம் நேரில் தாக்கல் செய்யப்பட்டது.

**தேர்தல் அலுவலரின் கையொப்பம்**

## இணைப்பு – 3
## (பத்தி 2.7.1)

**வேட்பு மனு தாக்கலுக்கான ஒப்புகைச்சீட்டு**

(1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், விதி எண் 52(8) (சி)ன் கீழ்)

1) சங்கத்தின் பெயர்

2) வேட்பு மனு வரிசை எண்

3) வேட்பாளிர்ன பெயர் மற்றும் முகவரி

4) வேட்பு மனு தாக்கல்: நாள் நேரம்

5) வேட்பு மனு தாக்கல் செய்தவர் பெயர் மற்றும் முகவரி

(வேட்பாளர் / முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர்)

தேர்தல் அலுவலரின் கையொப்பம்

**இணைப்பு – 4**
**(பத்தி 2.11.3)**

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை

**முனைவர் மு.ராஜேந்திரன், இ.ஆ.ப.,**
**ஆணையர்**

ந.க.**321/2018/**கூதே.**1** நாள் **19.07.2018**

பொருள் : கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் **2018 –** நிர்வாகக்குழு உறுப்பினர்கள்,தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கைகள் – தேர்தல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்ட சங்கங்கள் – மீண்டும் நடவடிக்கைகள் தொடருதல் – நடவடிக்கைகள் முறையாக சட்டபூர்வமாக நடத்துதல் – அறிவுரைகள் வழங்குதல்**.**

பார்வை : 1) ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.**322** முதல் **334/2018/**கூதே**1** நாள் **5.03.2018.**
**2)** ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.**321/2018/**கூதே**1** நாள் **21.04.2018.**

•••••

**ஆணை :**

பார்வை **(1)** மற்றும் **(2)**ல் கண்ட ஆணையத்தின் தேர்தல் திட்டங்கள்படி தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சங்கங்களில் சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள்

முழுவதுமாகவோ அல்லது சில நிலைகளிலோ ஆணையத்தால் ரத்து செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டன. அச்சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்திட மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைக்குப் பின்னர், அதனடிப்படையில் ஆணையம் தனியே ஆணை வழங்க உள்ளது.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் வேட்புமனு தாக்கல், பரிசீலனை, நிராகரித்தல் போன்ற வேட்புமனு நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

ரத்து செய்யப்பட்ட சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்திட ஆணையம் ஆணை வழங்கும் நிலையில், வேட்புமனு தொடர்பான நடவடிக்கைகள் மிகச் சரியாக, விதிகளுக்குட்பட்டு, எவ்விதப் புகார்களுக்கும் இடம் தராது நியாயமாகவும், சுதந்திரமாகவும், சரியாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் விதமாக, ஏற்கனவே தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு, துணைக்கையேடு, ஆணையச் சுற்றறிக்கைகள் கையேடு பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகியவற்றில் வேட்புமனு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து கீழ்வரும் அறிவுரைகளையும் ஆணையம் வழங்குகிறது.

**1)** வேட்புமனு பரிசீலித்தல், நிராகரித்தல், மீளப்பெறுதல் போன்ற வேட்புமனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும் தேர்தல் அலுவலர் அறிவிக்கப்பட்ட நாட்களில், இடங்களில், நேரங்களில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட நேரங்கள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

2) காவல்துறை பாதுகாப்பு தவறாது இருத்தல் வேண்டும்.

3) வேட்புமனுக்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் வேறு எவரும் கையாள்வதற்கோ, எடுத்துச் சொல்வதற்கோ, சேதப்படுத்துவதற்கோ சிறிதும் இடம் தரக்கூடாது.

4) வேட்புமனு பெற விரும்பும் அனைவருக்கும் வேட்புமனு அளித்திடல் வேண்டும்.

5) தேர்தல் அலுவலரிடமிருந்து மட்டுமே வேட்புமனு பெறவேண்டும் என்பது அவசியமல்ல. இது தொடர்பாக ஆணையத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரைப்படி வேட்புமனு தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்று எவ்வகையிலும் இருக்கலாம். ஆயினும் படிவம் 18—ன்படி இருத்தல் அவசியம்.

6) வேட்புமனு பெறும் பொழுதே, வேட்புமனுவில் காணப்படும் உறுப்பினர் எண், போட்டியிடும் தொகுதி பற்றிய சரியான விவரம், கையெழுத்து விடுதல், கையெழுத்து தவறான இடத்தில் போட்டிருத்தல், மனுவில் சில விவரங்கள் நிரப்பப்படாதிருத்தல், உறுப்பினர் எண் விடுதல், தவறாக இருத்தல் போன்றவற்றை சரி செய்தும், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளுக்கேற்ப பதிவு செய்தும் பெறுதல் வேண்டும். இது போன்ற சிறுவிடுதல்களுக்காக வேட்புமனுவை நிராகரிக்கக் கூடாது.

7) வேட்புமனு சரியாக நிரப்பப்படவில்லை. உறுப்பினர் எண் சரியாகக் குறிப்பிடவில்லை. கையெழுத்தில் மாறுபாடுள்ளது. கையொப்பம் தவறான இடத்தில் இடப்பட்டுள்ளது போன்ற சிறிய அற்பக் காரணங்களுக்காக நிராகரிக்கக் கூடாது. வாக்காளர் பட்டியலில் உள்ளவரும் வேட்புமனு தாக்கல் செய்பவரும் ஒருவரே

என்று தேர்தல் அலுவலர் விசாரித்து மன நிறைவு கொள்வராயின், வேட்புமனுவினை நிராகரித்தல் கூடாது.

**8)** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர் படிவம் **18–ல்** அளித்திடும் உறுதிமொழியே (Candidate's Declaration) போதுமானது. ஆவணச் சான்றுகள் கோருதல் கூடாது. மறுப்பாளர்கள் இருப்பின், வேட்பாளர்களால் மறுக்க இயலாத மிகவும் வலுவுடைய ஆதாரங்களை காண்பித்தால் மட்டுமே நிராகரிக்க வேண்டும்.

**9)** வரிசை எண்.3ல் கலம் **5,6** பூர்த்தி செய்யவில்லை என்ற காரணத்திற்காக நிராகரித்தல் கூடாது. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர் மட்டுமே நிரப்பப்பட வேண்டிய கலம் அது.

**10)** ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தவர் அல்லாதவர்கள் உறுதிமொழியினை அடிக்கவில்லை என்ற காரணத்தால் நிராகரிக்கக் கூடாது.

**11)** வேட்புமனு பெறும் பொழுது வேட்புமனுவில் வரிசை எண், நேரம், நாள் ஆகியவற்றை தேர்தல் அலுவலர் குறிப்பிட்டு தேதியுடன் கூடிய தனது சுருக்கொப்பத்தையும் இடுதல் வேண்டும்.

**12)** வேட்புமனு தாக்கல் செய்வோருக்கு அதனைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டு வழங்கிட வேண்டும்.

**13)** வேட்புமனுத் தாக்கலின்போது கூட்ட நெரிசல் ஏற்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். கூட்ட நெரிசலால் ஏற்படும்

சிரமங்களைத் தவிர்த்திட வேட்புமனு தாக்கல் செய்பவர் உள்ளிட்ட ஐந்து நபர்களுக்கு மேல் அனுமதித்தல் கூடாது.

**14)** வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுமேயாயின் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும், தள்ளுபடி செய்யப்படுமேயாயின் அதற்கான காரணங்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் வேட்புமனுவில் பதிவு செய்திடல் வேண்டும்.

**15)** ஒரு வேட்பாளர், தான் போட்டியிடும் ஒரு உறுப்பினர் இடத்தைத்தவிர இதர இடங்களுக்கு முன்மொழிபவராகவோ வழிமொழிபவராகவோ கையொப்பமிடலாம். அந்த காரணத்திற்காக வேட்புமனுவினை நிராகரித்தல் கூடாது. உதாரணத்திற்கு **11** நிர்வாகக்குழு உறுப்பினர் இடங்களைக் கொண்ட சங்கங்களில், தான் போட்டியிடும் ஒரு இடத்தைத் தவிர்த்து மீதி **10** இடங்களுக்கு முன்மொழிபவராகவோ, வழிமொழிபவராகவோ கையொப்பம் இடலாம்.

**16)** நிர்வாகக்குழு உறுப்பினர் வேட்புமனு தாக்கல், பெறுதல், பரிசீலனை போன்றவை தொடர்பாக விதி எண்.**52(8)**ல் சொல்லப்பட்டவை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

**17)** வேட்புமனுக்களில் எக்காரணம் கொண்டும் தேர்தல் அதிகாரிகளால் திருத்தம் மேற்கொள்ளப்படக்கூடாது.

**18)** அனைத்து தேர்தல் அலுவலர்களும் வேட்புமனு தாக்கல், பரிசீலனை, செல்லத்தக்க வேட்புமனுக்கள் பட்டியல் வெளியிடுதல், வேட்புமனு திரும்பப் பெறுதல் மற்றும் போட்டியிடும் வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடுதல் போன்ற வேட்புமனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும், இது தொடர்பாக சட்ட விதிகளில் சொல்லப்பட்டவை மற்றும்

ஆணையத்தின் அறிவுரைகளைத் தவறாது கைக்கொண்டு எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி செய்யப்படுவதையும் தேர்தல்

சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதையும் மாவட்ட தேர்தல் அலுவலர்களை உறுதி செய்ய வேண்டும்.

**ஒம்/–**
**ஆணையர்**

நகல் :

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர், சென்னை.
2) அனைத்து செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.
3) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4) அனைத்து தேர்தல் பார்வையாளர்கள்.

## இணைப்பு – 5
## பத்தி (3.2.3)
## Cooperative Elections / Urgent

**Tamil Nadu State Cooperative Societies Election Commission, Chennai – 18.**

**From**

Thiru. M.R.Mohan, I.A.S., (Rtd.,)
Commissioner,
TamilNadu State Cooperative Societies Election Commission,
273, Anna Salai,
Teynampet, Chennai – 600 018.

**To**

The State Election Officers

**Rc. No. 944/2013/CE1** **Dated : 05 .04.2013.**

**Sir,**

**Sub:** Act and Rules – The Tamil Nadu Cooperative Societies Act 1983 (Tamil Nadu Act 30 of 1983) – Exemption to all Primary Cooperative Societies from the first proviso to clause (a) of Sub-section (1) of Section 33 of the Tamil Nadu Cooperative Societies Act 1983 enabling all the eligible members in general to contest and get elected against the seats reserved for Women, scheduled Castes and Scheduled Tribes in certain circumstances – Orders – Issued.

**Ref** : G.O. (MS) No.49, Cooperation, Food and Consumer Protection (CJ1) Department Dated 4.4.2013.

*****

A copy of the G.O. referred above is enclosed wherein Government have issued orders exempting all the Primary Cooperative Societies from the provisions of the first proviso to clause (a) of Sub-Section (1) of section 33 of the said Act, if such society has no such member from the category of women or from the class of scheduled castes and scheduled Tribes as the case may be.

2. In view of the above orders issued by the Government, the State Election Officers are requested to reschedule the Elections of such of those societies in stage–I and stage II for which elections could not be conducted for want of this clarification to third stage or fourth stage as the case may be according to the availability of Man Power to conduct such elections and write to the Election Commission for ratification of the Election schedule. The State Election Officers must ensure that necessary

notification or errata need to be issued without any omission for such changes in Election schedule.

3. The State Election Officers are further informed that in respect of societies coming under stage I and Stage – II where the process of filing nomination is already over, non filing up of vacancies reserved for SC/ ST and Women will be treated as casual vacancy and on receipt of report from the State Election Officers for filling up of such vacancies, the Commission will initiate necessary action to fill up those vacancies in the light of the orders issued in the above said Government Order later. The Election of President Vice President has to be conducted as per the programme already communicated for such stages by the Commission.

Commissioner

**c. 944/2013/CE-1**

**…………………………………… True Copy of the G.O. ……………………………………**

## ABSTRACT

Act and Rules – The Tamil Nadu Co-operative Societies Act, 1983 (Tamil Nadu Act 30 of 1983) – Exemption to all Primary Co-operative Societies from the first proviso to clause (a) of sub-section (1) to section 33 of the Tamil Nadu Co-operative Societies Act, 1983 enabling all the eligible members in general to contest and get elected against the seats reserved for Women, Scheduled Castes and Schedules Tribes in certain circumstances – Orders – Issued.

Co-operation, Food and Consumer Protection (CJ1) Department

G.O. (Ms.) No.49

Dated : 04.04.2013.

நந்தன வருடம் பங்குனி **22,** திருவள்ளுவர் ஆண்டு **2044**

Read:

1) From the Registrar of Co-operative Societies, Letter Rc.No. 14156/2013/SF3 dated 13.3.2013.

2) From the Registrar of Co-operative Societies, Letter Rc.No. 14156/2013/SF3 dated 29.3.2013.

---------

**ORDER:**

In exercise of the powers conferred by clause (a) of section 170 of the Tamil Nadu Co-operative Societies Act, 1983 (Tamil Nadu Act 30 of 1983), the Governor of Tamil Nadu, in the public interest, hereby exempts all the Primary Co-operative Societies from the provisions of the first proviso to clause (a) of sub-section (1) of section 33 of the said Act, if such society has no such member from the category of Women or from the class of Scheduled Castes and Scheduled Tribes, as the case may be.

(By Order of the Governor)

M.P.NIRMALA
SECRETARY TO GOVERNMENT

To

The Registrar of Co-operative Societies, Chennai – 10.
The Commissioner, Tamil Nadu State Co-operative Societies Election Commission,
Chennai – 18.

## இணைப்பு – 6
## (பத்தி – 2.6.1.)

### ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து வேட்பாளர்களின் பட்டியல்

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள்

விதி எண் 52 உபவிதி (8) கூறு (g)யைப் பார்க்க)

.. .. .. .. .. .. .. .. .. .. .. .. மாவட்டம் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. வட்டம் .. .. .. .. .. .. .. .. ..

.. .. ..கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவுக்கு .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. தொகுதியிலிருந்து தேர்தல்

(பின்பக்கம் பார்க்க)

| வரிசை எண் | வேட்பாளரின் பெயர் | பாலினம் | வேட்பாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர் / சார்ந்தவர் அல்ல | வேட்பாளரின் முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |

இடம்:

நாள்: தேர்தல் அலுவலரின் கையொப்பம்

## இணைப்பு – 7
## (பத்தி 3.7.2.)
## படிவம் எண்.19

**(1988** ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் விதி எண்**.52** உபவிதி **(8)** கூறு (எச்) பார்க்க,

**வேட்பு மனுவை திரும்பப் பெற்றதற்கான அறிவிப்பு**

.....................மாவட்டம்...........................வட்டம்.........
.........................கூட்டுறவுச் சங்கத்தின்.......................
........... தொகுதியிலிருந்து நிர்வாகக் குழுவிற்கு தேர்தல்.

பெறுநர்
தேர்தல் அலுவலர்,

..................................................... மேற்படி தேர்தலில் வேட்பாளராகிய ................................ (வேட்பாளர் பெயர்) என்ற நான் என்னுடைய வேட்பு மனுவை திரும்ப பெற்றுள்ளேன் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் :

நாள் : **வேட்பாளரின் கையொப்பம்.**

**தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு**

இந்த அறிவிப்பு.................மணிக்கு................(நாள்) வேட்பாளர்/முன்மொழிபவர்/ வழி மொழிபவர்....................... (பெயர்) ஆல் என்னிடத்தில் என்னுடைய அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது.

**நாள் :** **தேர்தல் அலுவலரின் கையொப்பம்.**

## இணைப்பு-8

## (பத்தி 4.1.1)

## படிவம் எண்.20

**(1988** ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்**.52** உபவிதி **(8)** கூறு **(**ஐ**)** பார்க்க**)**

போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியல்

.........................மாவட்டம்.........................வட்டம்............

................. கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவுக்கு...............

.......................................தொகுதியிலிருந்து தேர்தல்

| ஒதுக்கப்பட்ட வரிசை எண் | வேட்பாளரின் பெயர் | பாலினம் | வேட்பாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்/சார்ந்தவர் அல்ல | வேட்பாளரின் முகவரி | வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

இடம் :

நாள் : **தேர்தல் அலுவலரின் கையொப்பம்.**